# மிக்ஜாம் புயல்: முதல்வரின் வேண்டுகோளை ஏற்று கட்சித் தலைவர்கள் - அரசு அதிகாரிகள் - தொழிலதிபர்கள் நிவாரண நிதி!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.12.2023) முகாம் அலுவலகத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் ஒருமாத சம்பளத் தொகைக்கான காசோலையும் வழங்கினார். உடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர்கள் மு.வீரபாண்டியன், நா.பெரியசாமி ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.12.2023) தலைமைச் செயலகத்தில், புதுச்சேரி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.சிவா, வி.ஏ. கென்னடி, செந்தில், சம்பத், நாகதியாகராஜன், நாஜிம், முன்னாள் அமைச்சர் சிவக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கோபால், கார்த்திகேயன், ஏ.கே.குமார், சக்திவேல், முகிலன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 11 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.12.2023) தலைமைச் செயலகத்தில், வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் ஜி.விஸ்வநாதன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1.25 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் துணைத் தலைவர்கள் சங்கர் விஸ்வநாதன், டாக்டர் சேகர் விஸ்வநாதன், டாக்டர் ஜி.வி. செல்வம் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இந்திய வனப் பணி சங்கத்தின் தலைவர் ஸ்ரீநிவாஸ் ஆர்.ரெட்டி, சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு இந்திய வனப் பணி சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார். உடன் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் வனத்துறை தலைவர் சுப்ரத் மொஹபத்ரா, திருமதி ஆர்.காஞ்சனா, இ.பிரசாந்த் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.12.2023) தலைமைச் செயலகத்தில், போத்தீஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் எஸ்.ரமேஷ் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

## பயன் தூக்கார் செய்த உதவிக்கு அன்பை விட நன்றியேது?

### தூய்மைப் பணியாளருக்கு ஊக்கத்தொகை வழங்கி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 14-**

**மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குப்பைகளை அகற்றிட களம் கண்ட 3449 தூய்மைப் பணியாளர்கள்உள்ளிட்டபிறபணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கியது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், “பயன் தூக்கார் செய்த உதவிக்கு அன்பை விட நன்றியேது?” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

கண்ணுக்கு ஒரு இடர் என்றால் நொடிப்பொழுதில் காக்க வரும் கை போல, தலைநகர் சென்னையிலும், புறநகர் மாவட்டங்களிலும் மிக்ஜாம் புயல் பாதிப்பைப் போக்கக் களம் கண்ட 3449 தூய்மைப் பணியாளர்கள்உள்ளிட்டபிறபணியாளர்களுக்கு 4000 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கினேன்.

பயன்தூக்கார் செய்த உதவிக்கு அன்பைவிட நன்றியேது?

இவ்வாறு அவர் தனது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.





சென்னையில் நேற்று முன்தினம் (12.12.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேரறிஞர் அண்ணா நினைவிடத்தை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருவதை ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தேசியவாத காங்கிரஸ் தலைவர்

## சரத்பவாருக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு



**சென்னை, டிச.14-**

**தேசிய வாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பான தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவார் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவார் அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.

தங்களது கூர்த்த மதிநுட்பம் சவாலான இக்கால கட்டங்களில் எங்களுக்கு வழி காட்டட்டும். துடிப்பான இந்தியாவுக்கான உங்களது ஆதரவைத் தொடர்ந்து நாடுகிறோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### சேலத்தில் நடைபெறும்

## தி.மு.க. இளைஞரணி மாநாடு திருப்புமுனை ஏற்படுத்தும்!

### அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் பேச்சு!

செஞ்சி, டிச.14-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அனைத்து அணி அமைப்பாளர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் செஞ்சியில் உள்ள தளபதி இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்:- டிசம்பர் 24 இல் சேலத்தில் நடைபெறும் தி.மு.க. இரண்டாவது மாநில மாநாட்டில்விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து தி.மு.க.வினர், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்என பெரும் திரளானோர் பங்கேற்க வேண்டும்.

சேலத்தில் நடைபெறும் இளைஞரணி மாநாடு இந்தியாவில் ஒரு திருப்பு முனை ஏற்படுத்தும் வகையில் அமைய உள்ளது. எதிர் வரும் நாடாளுமன்ற தேர்தலில் இந்த மாநாடு முன் உதாரணமாக அமைய எல்லோருடைய நம்பிக்கையாக உள்ளது.

கூட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ரகுபதி, வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கோபிநாத், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சந்திரன், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் அன்சாரி, கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் செந்தில் குமார், அமைப்புசாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் கோ. தமிழரசன், இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் தமிழரசன், வர்த்தக அணி அமைப்பாளர் விஜயராகவன், மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சிவகாமி, அயலக அணி அமைப்பாளர் காதர் நவாஸ், மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா, தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ரோமியன் தொண்டரணி அமைப்பாளர் ராஜசக்தி, ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் திருமலை, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மக்கள் அதிகார மாவட்டச் செயலாளருக்கு கொலை மிரட்டல் விடுத்த

## பா.ஜ.க. மாவட்ட தலைவரை கைது செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்!

சிவகங்கை, டிச. 14 -

சிவகங்கை மாவட்ட மக்கள் அதிகாரத்தின் செயலாளராக காளையார் கோவிலைச் சேர்ந்த வைகை சரவணன் உள்ளார். இவரது அமைப்பான மக்கள் அதிகாரத்தின் சார்பில் காளையார் கோவிலில் பா.ஜ.க. ஆட்சி குறித்து குறைபாடுகளை சுவரில் விளம்பரமாக எழுதப்பட்டுள்ளது .

இதுகுறித்து சிவகங்கை மாவட்ட பா.ஜ.க. தலைவர் மேப்பல் சக்தி மற்றும் கருப்பையா ஆகியோர் வைகை சரவணனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடனடியாக பா.ஜ.க.வை பற்றி எழுதியசுவர் விளம்பரத்தினை அரை மணி நேரத்தில் அழித்துவிட வேண்டும். இல்லை என்றால் கொலை செய்து விடுவோம் என்று மிரட்டியுள்ளார்கள். இதுகுறித்து காளையார்கோவில் போலீசில் மக்கள்அதிகார மாவட்ட பொதுச் செயலாளர் வைகை சரவணன் புகார் செய்துள்ளார். கொலை மிரட்டல் விடுத்த பா.ஜ.க. மாவட்டத்தலை வர் மேப்பல் சக்தி கருப்பையா ஆகியோர் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து உடனடியாக கைது செய்ய வலியுறுத்தி சிவகங்கையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மார்க்சீய கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் அதிகாரம் சார்பில் கலெக்டர் ஆபிஸ் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.